இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல. : 01/2023

எனது இலக்கம் : COM/Trans/V/වා.ස්.මා.2024
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2023.08.25 ஆந் திகதி

இணைந்த சேவைகளிலுள்ள அலுவலர்களின் வருடாந்த இடமாற்றங்கள் – 2024

இல. 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய (அதி விஷேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் (தொகுதி இல.1) XVIII ஆம் அத்தியாயத்தில் அரசாங்க அலுவலர்களின் இடமாற்றம் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைந்த சேவைகளின் இடமாற்ற கொள்கைகள் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. இணைந்த சேவைகளுக்குரிய பின்வரும் சேவைகளின் வருடாந்த இடமாற்றங்கள் 2024 ஜனவரி 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

I. அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை (வகுப்பு I)
II. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (வகுப்பு 2/3)
III. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை (தரம் III/II/I)
IV. இலங்கை அரசாங்க நூலகர் சேவை (வகுப்புகள் III/II/I)
V. முகாமைத்துவ சேவை உத்தோயோகத்தர் சேவை (தரம் III/II/I)
VI. இணைந்த சாரதிகள் சேவை (III/II/I/விசேட தரம்)
VII. அலுவலக உதவியாளர் சேவை (III/II/I/விசேட தரம்)

அலுவலர்களுக்கும், அரச சேவைக்கும் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்ற நடைமுறைகளைப் பின்பற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும். மேலும், ஒத்துமாறல் இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் 2023 ஆகஸ்ட் 25 மற்றும் 2023 டிசம்பர் 31 ஆகிய திகதிகளுக்கிடையில் ஏற்றுக்கொள்ளப்படலாகாது.

03. இடமாற்றக்குழுக்கள்

இடமாற்றக்குழுக்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.1 இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்றக்குழுக்கள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆணைக்குழுக்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் நடைபெறும் இணைந்த சேவைகளுக்குரிய அலுவலர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3.1.1. இடமாற்றங்கள் தொடர்பில் கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினைக் கருத்தில்கொண்டு அந்தந்த சேவைகளுக்கு போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், உரிய சேவைகளுக்கு தனித்தனியான இடமாற்றக்குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும்.

3.1.2 ஒவ்வொரு இடமாற்றக் குழுவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் (தொகுதி-I) XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இச்சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொதுவான கொள்கைகளுக்கு இணங்க இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

3.2 **உள்ளக இடமாற்றக்குழுக்கள்**

உள்ளக இடமாற்றங்களுக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் இருப்பின் குறுத்த நிறுவத்தினால் உள்ளக இடமாற்றக் குழு தாபிக்கப்பட்டு அவ் விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்துடன் உள்ள இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளக இடமாற்றக் குழுக்கள் எனக்கு அறிக்கையிடப்பட வேண்டும் என்பதுடன் குறித்த இடமாற்ற மற்றும் மீளாய்வுக் குழுக்கள் இணைந்த சேவையின் வருடாந்த இடமாற்ற குழுக்கள் மற்றும் மேன்முறையீட்டுக் குழுக்களை ஒத்திருக்கக் கூடியவாறு அமைக்கப்பட வேண்டும்.

அனைத்து உள்ளக இடமாற்றக் குழுக்களையும் நடைமுறைப்படுத்த, இடமாற்ற கொள்கையினை தாயரித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் முறையான உள்ளக இடமாற்றக் கொள்கைக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாத அனைத்து நிறுவனங்களும் இது தொடர்பான முறையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3.2.1 **உள்ளக இடமாற்றக்குழுக்க**ளின் தீர்மானங்கள்

திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் மாவட்ட செயலகங்களால் மேற்கொள்ளப்படும் இடமாற்றக்குழுக்கள், இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்றக்குழுக்களிற்கு பின்னரே அமைக்கப்பட வேண்டுமென்பதோடு இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்றக்குழுக்களினால் இடமாற்றம் வழங்கப்பட்ட அலுவலருக்கு மீண்டும் உள்ளக இடமாற்றக் குழுக்களினால் இடமாற்றம் வழங்கப்படலாகாது.

04. இடமாற்றங்களுக்கான அலுவலர்களின் தகுதியை தீர்மானிப்பதற்கான பொதுவான கொள்கைகள்.

இது தொடர்பாக, இணைந்த சேவையின் வருடாந்த இடமாற்ற கொள்கையின் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் உரித்துடையனவாகும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு

உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தும் இதுவரை உள்வாங்கப்படாத அலுவலர்களினாலும் வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

05. இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்ற குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

5.1 இணைந்த சேவையின் அனைத்து அலுவலர்களும் இணைய வழி ஊடாக வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இணைந்த சாரதிகள் சேவை மற்றும் அலுவலக உதவியாளர் சேவையின் அலுவலர்கள் இணையவழி ஊடாக தனிப்பட்ட விதத்தில் விண்ணப்பிப்பது கடினமாயின் தங்கள் சேவை நிலையங்களின் மூலமாக அதனை மேற்கொள்ள முடியும். அதற்கான வசதிகளை வழங்க நிறுவன தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

a. LGN மூலம் இணைய வசதி வழங்கப்பட்டிருந்தால் http://10.250.1.112/misco என்ற இணைய முகவரி மூலம் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.
b. வேறு வலையமைப்புகள் மூலம் இணைய வசதி வழங்கப்பட்டிருந்தால் http://43.224.125.68/misco என்ற இணைய முகவரி மூலம் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

5.2 இணைந்த சேவைப் பிரிவில் அமைக்கப்பட்ட இடமாற்றக் குழுக்களிற்கு பின்வரும் ஆவணங்களை 2023/09/08 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள் / நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

i. இணையவழி மென்பொருள் மூலம் பெறப்பட்ட 2023/12/31ஆந் திகதியில் உள்ளபடி நிறுவனத்தில்/சேவை நிலைய குழுவிற்குள் உள்ள ஓர் அலுவலகத்தில் அல்லது அலுவலகங்களில்/மாவட்டத்தில் 05 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்த அலுவலர்களின் பெயர்ப்பட்டியல் (அலுவலர்களின் தகவல்கள் சரியாக உள்ளிடப்பட்டிருந்தால், மீண்டும் ஆவணங்களைத் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், அனைத்து அலுவலர்களினதும் தகவலை MISCO அமைப்பிற்குள் உள்ளீடு செய்து புதுப்பிக்க நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்)

ii. அமைச்சுக்கள் / திணைக்களங்கள் / அலுவலகங்களில் சேவையின் தேவை கருதி தொடர்ந்து வைத்திருப்பதற்கு தேவையான அலுவலர்கள் மற்றும் வைத்திய சான்றிதழின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்ட கொடிய நோய்களினால் அவதியுறுகின்ற இடமாற்றம் செய்யப்பட முடியாத அலுவலர்கள் சம்பந்தமாக திணைக்களத் தலைவரினால் தனிப்பட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பாக 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் அலுவலர்களின் பெயர்ப்பட்டியலிலும் குறிப்பிடமுடியும்.

iii. எவ்வாறாயினும், விருப்பமான சேவை நிலையங்களாக குறிப்பிடப்பட்ட பணியிடங்களில் சேவையின் தேவை அடிப்படையில் அலுவலர்களை தொடர்ந்து வைத்திருப்பது தொடர்பான கோரிக்கைகள் பரிசீலனைக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

iv. வருடாந்த இடமாற்ற கட்டளைகள் வழங்கப்பட்ட பின்னர் மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் இடமாற்ற சக்கரத்திலுள்ள மற்றைய அலுவலர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமென்பதால் பரிசீலனைக்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

5.3 இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள்

5.3.1. இணையவழி மூலம் பூரணப்படுத்தப்பட்ட இணைந்த சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்களுக்கான திணைக்கள தலைவரின் பரிந்துரை இணையவழி மூலமாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5.3.2. மேலும் அலுவலரொருவரினால் இணையவழி முறையினுடாக ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படல் வேண்டும்.

5.3.3. இடமாற்றங்களுக்காக விண்ணப்பிக்கும் அலுவலர்கள் குறித்த பிரதேசமொன்றிலுள்ள குறித்த அலுவலகமொன்றிற்கு மட்டும் இடமாற்றத்தினை எதிர்பார்த்திருப்பது, குறித்த பிரதேசத்திற்கு செல்வது தேவையின் அடிப்படையிலா, அல்லது அவர் விரும்பும் திணைக்களத்தில் அல்லது அலுவலகமொன்றில் பணியாற்றும் நோக்குடனா என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. அதற்கிணங்க, தமது விருப்பங்களை முன்னுரிமை ஒழுங்கில் வரிசைப்படுத்தி பிரதேசங்கள் அல்லது அலுவலகங்கள் பெயரிடப்படல் வேண்டும்.

5.3.4. மேலும்,

i. ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் கீழுள்ள பிராந்திய அலுவலகங்களுக்கு செல்லும் நோக்கத்துடன் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தால், குறித்த உப / பிராந்திய அலுவலகங்கள் சரியாகக் குறிப்பிடப்பட வேண்டும். தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றத்திற்காக விண்ணப்பித்து, இடமாற்றம் வழங்கப்பட்டதன் பின்னர் உரிய நபர் விண்ணப்பித்திருப்பது அந்நிறுவனத்தின் கீழுள்ள பிராந்திய அலுவலகமாக இருப்பின், இடமாற்றங்களை மறுபரிசீலனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

ii. அலுவலர்களினால் தங்கள் சேவை நிலையமாக, தாம் சேவையாற்றும் சேவை நிலையம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, குறித்த நிறுவனத் தலைவரினாலேயே பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவும் வேண்டும். அவ்வாறே உப அலுவலகங்களில் சேவையாற்றும் அலுவலர்கள் தமது சேவை நிலையமாக குறித்த உப அலுவலகத்தை குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:

a. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தவிர இணைந்த சேவைகளின் ஏனைய அனைத்து சேவை அலுவலர்களும் உப /பிராந்திய அலுவலகங்களில் பணிபுரிந்தால், Sub Department இற்கு கீழே தாம் சேவை செய்யும் நிலையத்தினை தெரிவு செய்ய வேண்டும். (உ+ம் - தொழில் திணைக்களத்தின் மாத்தறை அலுவலகத்தில் பணிபுரிந்தால், Sub Department----Matara Labour Office என குறிப்பிடப்பட வேண்டும். திணைக்களத் தலைவர் தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் திணைக்களம் என்பதாகும்)

b. இணைந்த சேவைகள் அலுவலர்களில், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் பிரதேச செயலகங்களில் பணியாற்றுபவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்கள் மட்டுமே என்பதால், அவ்வாறான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாத்திரம் Department Attachment மற்றும் Ministry Attachment மூலம் தமது சேவை நிலையத்தினை குறிப்பிட வேண்டும். (உ+ம் - யாராவது ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் பணியாற்றுவது பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் அத்தனகல்ல பிரதேச செயலகத்தில் ஆயின் சேவை நிலையமாக குறிப்பிட வேண்டியது Department Attachment----Multi Development Task Force-Attanagalla என்பதாகும். திணைக்களத் தலைவர் பணிப்பாளர் நாயகம், பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களம் என்பதாகும்)

c. வேறு எந்தவொரு சேவையின் அலுவலர்களும் Department Attachment மற்றும் Ministry Attachment என்பதனை பயன்படுத்தக்கூடாது. இடமாற்றங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்கும்போது, சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது திணைக்களத் தலைவரின் பரிந்துரைகளுடன் மட்டுமே இடமாற்ற விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

iii. சரியான தரவுகளை உள்ளீடு செய்யாத காரணங்களினால் இடமாற்ற சக்கரங்களை நடைமுறைப்படுத்தும்போது அலுவலர்கள் உடல் ரீதியாக (Physically) உரிய சேவை நிலையத்தில் பணியாற்றாத காரணத்தினால் ஏனைய அலுவலர்கள் பாதிக்கப்படுவதனால், சரியான தரவுகளை உள்ளீடு செய்தல் அனைத்து அலுவலர்களினதும் பொறுப்பு என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் இது தொடர்பாக மேலும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

06. வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழு

6.1 இடமாற்றக் கட்டளைகளுக்கெதிராக செய்யப்படும் ஏதேனும் மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்வதற்கென, நடைமுறை விதிகளின் 254 ஆம் பிரிவிற்கேற்ப வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழு அமைக்கப்பட்டு அதற்கிணங்க அவசியமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளானவை நடைமுறை விதிகளின் 254(iii) ஆம் பிரிவுக்கு இணங்கினால் மட்டுமே அவை பரிசீலிக்கப்படும்.

6.2

a. வருடாந்த இடமாற்ற சக்கரத்தில் உள்ள மற்ற அலுவலர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால், ஒரு அலுவலரின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்தை இரத்து செய்யவோ, ஒத்திவைக்குமாறு பின்னர் மேல்முறையீடு செய்வதோ அல்லது அது தொடர்பில் சேவையின் தேவை கருதி வைத்திருத்தல் போன்ற காரணங்களுக்காக திணைக்களத்தலைவர் பரிந்துரை வழங்காதிருப்பதுடன், ஏதேனும் நியாயமான காரணங்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற கோரிக்கைகளை பரிந்துரைக்கும் சந்தர்ப்பத்திலேயே, இது சம்பந்தமாக கவனத்தில் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

b. இடமாற்றக் கட்டளைகளுக்கு எதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்வதற்கு அமைக்கப்படும் வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழுக்களினால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலதிக பரிசீலனைகள் மேற்கொண்டதன் பின்னர் தீர்மானங்களை எடுக்கப்படும்.

i. இடமாற்ற நடைமுறைக்கு எதிராக வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளைகள்
ii. அலுவலர்களின் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பங்கள் (முன்னுரிமையின் அடிப்படையில் சேவை நிலையங்கள் 1, 2 மற்றும் 3 ஆகியன கோரிக்கைகளாகக் கருதப்படும்)
iii. அலுவலர்களின் கோரிக்கைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளைகள். (விருப்பமான சேவை நிலையத்தில் 05 வருட சேவையை நிறைவு செய்த பின்னர் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களினால் நிரந்தர வசிப்பிடத்திற்கு அருகாமையில் அல்லது வசிப்பிட மாற்றம் தொடர்பான கோரிக்கைகளுக்கு இது பொருந்தாது)
iv. இடமாற்ற விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியின் பின்னர் அலுவலர்கள் முகங்கொடுக்கும் எதிர்பாராத அவசர நிலைமைகள், இடர்கள், நோய்கள் போன்ற அனுதாப சூழ்நிலைகள் காரணமாக நம்பகமான பரிந்துரைகளுடன் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள்.

6.3 வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவினால் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களிற்குப் பின்னர் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளானவை நடைமுறை விதிகளின் அத்தியாயம் XVIII இன் பிரிவு 256 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாத மேன்முறையீடுகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

6.4 உள்ளக இடமாற்ற குழுக்களினால் வழங்கப்பட்ட இடமாற்ற தீர்மானங்கள் தொடர்பாக திருப்திப்படாத அலுவலர்கள், உள்ளக மீளாய்வு குழுக்கள் நடைபெற்ற பின்னர் குறித்த தீர்மானம் தொடர்பாக திருப்தியடையவில்லையாயின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவில் மேல்முறையீடு செய்ய முடியும்.

07. இடமாற்றங்களுக்கான கால அட்டவணை

இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்றக் குழுக்களுக்கான கால அட்டவணை

மே 15 இற்கு முன்	இடமாற்றக் குழுக்களை அமைத்தல்
ஜூன் 01 இற்கு முன்	இடமாற்ற நடைமுறையினைத் தயாரித்தல்
ஆகஸ்ட் 25 இற்கு முன்	வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கையினை வெளியிடுதல்
செப்டெம்பர் 08 இற்கு முன்	பின்வரும் ஆவணங்களை இணைய வழியாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் (i) LGN மூலமாக இணைய வசதியினை அணுகுவதாயின் http://10.250.1.112/misco எனும் இணையதள முகவரியையும் பிற வலைப்பின்னல் மூலமாக இணைய வசதியினை அணுகுவதாயின் http://43.224.125.68/misco மூலமாகவும் ஒன்லைன்(Online) முறையில் விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்திய பின்னர், நிறுவன தலைவரினால் பரிந்துரை செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பம் (online application) (ii) இணையவழி மென்பொருள் மூலம் பெறப்பட்ட 2023/12/31ஆந் திகதியில் உள்ளபடி நிறுவனத்தில்/ சேவை நிலைய குழுவிற்குள் உள்ள அலுவலகத்தில் அல்லது ஒரு அலுவலகத்தில் /மாவட்டத்தில் 05 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அலுவலர்களின் மற்றும் இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்த அலுவலர்களின் பெயர்ப்பட்டியல்
செப்டெம்பர் 22 இற்கு முன்	இணைந்த சேவைகள் பிரிவின் இடமாற்றக் குழுக்கள் சேர்ந்து மேற்கொள்ளும் இடமாற்ற தீர்மானங்கள் மேற்கொள்ளுதலை முடிவுறுத்தல்.
ஒக்டோபர் 06 இற்கு முன்	இடமாற்றக் கட்டளைகளை அமைச்சுக்களுக்கு/ திணைக்களங்களுக்கு அறிவித்தல் மற்றும் வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கு குழுக்களை நியமித்தல்
ஒக்டோபர் 20 இற்கு முன்	இடமாற்றங்கள் தொடர்பில் இணைந்த சேவைகள் பிரிவின் மூலம் மீளாய்வுக் குழுக்களிற்கான மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி
நவம்பர் 03 இற்கு முன்	மீளாய்வுக் குழுக்களின் மூலம் அத்தகைய மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படல்
நவம்பர் 17 இற்கு முன்	மேன்முறையீடுகள் தொடர்பிலான தீர்மானங்களைத் தெரியப்படுத்தலை நிறைவுசெய்தல்

இணைந்த சேவைகள் இடமாற்ற தீர்மானங்கள் வெளியிடப்பட்ட பின்னரே, உள்ளக இடமாற்றங்கள் இடம்பெற வேண்டும். இணைந்த சேவைகள் இடமாற்ற தீர்மானங்கள் வழங்கப்பட்ட அலுவலருக்கு மீண்டும் உள்ளக இடமாற்றம் மூலம் இடமாற்றம் வழங்கப்படலாகாது.

08. வருடாந்த இடமாற்ற கண்காணிப்புக் குழு

வருடாந்த இடமாற்றத்தினை செயற்படுத்தும் நடைமுறையின் முன்னேற்றம் தொடர்பாக 2024/02/15 ஆந் திகதியின் பின்னர் கண்காணிப்புக் குழுவினை நிறுவி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு

9.1

a. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் PSC/APL/1/AT/2018 இலக்கமும் 2019.05.11ஆம் திகதிய கடிதத்தில் உள்ளவாறு, இடமாற்றம் பெற வேண்டியவர் என கருதப்படும் விசேட பயிற்சி பெற்ற ஏதேனும் அலுவலரொருவரின் சேவையின் தேவையின் பொருட்டு மேலும் ஒரு வருடத்திற்கு குறித்த திணைக்களத்தில் தொடர்ந்து சேவையாற்ற வைத்திருக்க திணைக்களத் தலைவர் விரும்பினால், பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பும் போது அது தொடர்பான காரணம் விளக்கமாக விபரிக்கப்பட்டு உரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தங்கள் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

b. வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காமல் தற்போதைய சேவை நிலையத்தில் 05 வருடங்களினை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் தொடர்பாக 05 வருடங்களிற்கு மேல் சேவைக் காலத்தினைக் கொண்ட அலுவலர்களின் விபரங்களை அனுப்பும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக விளக்கமாக விபரித்து உரிய அமைச்சின் செயலாளரின் / திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பத்தினை அனுப்பி வைக்க வேண்டும். ஒரு தடவை இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அலுவலருக்கு மீண்டும் இந்த சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

c. மேலும், விருப்பத்திற்குரிய சேவை நிலையம் தொடர்பில், மேலே 9.1. அ இல் குறிப்பிடப்பட்டுள்ள சகாய நடைமுறை ஏற்புடையதல்ல என்பதுடன், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகமானவர் இடமாற்றக் குழுக்களுக்கு இது தொடர்பில் அறிவிப்பதன் மூலம் உரிய நடவடிக்கையினை எடுப்பார். ஒரு திணைக்களத் தலைவருக்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான அலுவலர்கள் தொடர்பில் மட்டுமே அத்தகைய கோரிக்கையினை மேற்கொள்ள முடியும்.

9.2 ஒவ்வொரு அலுவலர் தொடர்பிலும் சரியானதும் முழுமையானதுமான தகவலே கொடுக்கப்படுகின்றது என்பதை நிறுவன / திணைக்களத் தலைவர்கள் கவனமாக உறுதிசெய்தல் வேண்டும். தவறான முழுமையற்ற தகவல்கள் அனுப்பப்படுவது கண்டறியப்படின் அது தொடர்பில் உரிய நிறுவன / திணைக்களத் தலைவர் மற்றும் உரிய பட்டியல்களைத் தயாரித்தவர் மற்றும் சரிபார்த்த அலுவலர் ஆகியோரே பொறுப்பானவர்களாக இருப்பதுடன், தவறான தகவல்களை சமர்ப்பித்ததற்காக ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுவர்.

9.3 வருடாந்த இடமாற்றக் கட்டளையின் மூலம் ஒரு அமைச்சு / திணைக்களத்திற்கு வெளியே இடமாற்றப்படும் அலுவலர் ஒருவரை பதில் உத்தியோகத்தரை எதிர்பார்த்து அவர் வரும் வரை வைத்திருத்தலாகாது என்பதுடன் குறித்த திகதியில் அவர்களின் புதிய சேவை நிலையங்களில்

கடமைக்கு அறிக்கையிடுவதற்கு அவர்களை இயலுமைப்படுத்தி, அவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் ஏற்பாடுகளை மீறும் வண்ணம் செயற்படும் திணைக்களத் தலைவர்கள் மீது உரிய ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உரிய அதிகாரிகளிடம் புகாரளிக்கப்படும்.

9.4 இடமாற்றக் கட்டளையினை செயற்படுத்தாது விடின், இடமாற்றக் கட்டளை செயற்படுத்துவதற்கு உரிய திகதிக்குப் பின்னரான அடுத்த மாதத்தில் இருந்து குறித்த அலுவலரின் சம்பளத்தினை நிறுத்துவதற்கு அலுவலர் தற்போது பணிபுரியும் நிறுவனத் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

9.5 இடமாற்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் நடைமுறை விதிகளின் (தொகுதி 01) பிரிவு 11 இன் ஏற்பாடுகளின் மீது அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படல் வேண்டும்.

9.6 இடமாற்றம் செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படும் அலுவலர்களின் கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கு ஏனைய அலுவலர்களைப் பயிற்றுவிப்பதனூடாக உரிய திகதியில் வருடாந்த இடமாற்றங்களை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சுக்களின் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்கள் எடுத்தல் வேண்டும். பிந்திய சந்தர்ப்பங்களில் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ள ப்படமாட்டாது.

9.7

a. இணையவழி தகவல் தொழிநுட்பத்தினை பயன்படுத்தி பணிபுரியும் பின்வரும் நிறுவனங்களில் மட்டும் இணைந்த சேவை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்ட எந்தப் பதவிக்கும் ஒரு குறிப்பிட்ட தொழில்முறைத் தகுதி அல்லது திறன் (உ+ம் - தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்புத் திறன், தொழில்நுட்பத் திறன் போன்றவை) தேவைப்பட்டால், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்கூட்டியே அறிவித்தல் வழங்க நிறுவனத்தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
- உள்நாட்டு இறைவரித்திணைக்களம்
- ஓய்வூதியத்திணைக்களம்
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

ஆனால், விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் கட்டாய சேவைக் காலத்தை முடித்த பின்னர் இடமாற்றங்கள் வழங்கும்போது அலுவலர்களை தொடர்ந்தும் தக்க வைத்திருத்தல் தொடர்பாக எக்காரணத்தினைக்கொண்டும் சந்தர்ப்பம் வழங்காதிருத்தலை நிறுவனத் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

b. அத்தகைய சிறப்புத் திறன் தேவைப்படும் பட்சத்தில், இடமாற்றம் பெற்று வந்த அலுவலருக்கு மேற்படி நிறுவனத்தில் போதிய பயிற்சி அளிக்கப்பட்ட பின்னரும், தனது பணிகளைச் செய்வதில் அவருக்கு சிரமம் இருப்பதைக் காணும் பட்சத்தில், அது தொடர்பில் நியாயமான காரணங்களை வெளிப்படுத்தி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அதன்பின் உரிய அலுவலரை அந்த நிலையத்திலிருந்து வெளியே இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அந்த நிலையத்திற்கு வருடாந்த இடமாற்றம் கோரிய அந்த

பதவிக்கு தகுதியான வருடாந்த இடமாற்ற பட்டியலில் அடுத்ததாக தொடர்ந்து இருக்கும் அலுவலர் அவருக்காக இணைப்பு செய்யப்படுவார். அதன்பின், வெளியே இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட அலுவலர் தகுதியான வருடாந்த இடமாற்ற பட்டியலில் அடுத்ததாக தொடர்ந்து இருந்த அலுவலரின் சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவார். மேலும், அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது சேவையின் தேவை கருதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால், அத்தகைய அலுவலர்களை பிறஇடமொன்றுக்கு இடமாற்றம் செய்யும்போது அவற்றை வருடாந்த இடமாற்ற விண்ணப்ப படிவத்தின் பட்டியல்படி மட்டுமே செய்ய வேண்டும்.

9.8 இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை தங்கள் அமைச்சு/ திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களின் கவனத்திற்கும் கொண்டுவர ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.

9.9 வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் 257 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் வலுவுடையதாக இருக்கும்.

10. அலுவலர்களின் பொறுப்புக்கள்
வருடாந்தஇடமாற்றக் கட்டளைகளைப் பெற்ற அனைத்து அலுவலர்களும் குறித்த திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்கு அறிக்கையிட கடமைப்பட்டுள்ளனர்.

11. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத ஏற்பாடுகள் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

12. இந்த சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் (தொகுதி I) அத்தியாயம் XVIII இன் பிரிவு 251 இன் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ எஸ். ஆலோக்கபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

இணைந்த சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை

1. அறிமுகம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் தொகுதி 1 அத்தியாயம் XVIII இலுள்ள 251 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இணைந்த சேவையிலுள்ள அலுவலர்களின் இடமாற்றக் கொள்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

2. வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படும் அலுவலர்களின் விபரங்கள்

2.1 உரிய அலுவலர்கள்

இணைந்த சேவைகளுக்குரிய பின்வரும் சேவைகளிலுள்ள அலுவலர்களுக்கு இவ்வருடாந்த இடமாற்றக் கொள்கையானது பொருத்தமானது.

i. அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை (வகுப்பு I)
ii. இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (வகுப்பு 2, 3)
iii. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை (தரம் III, II, I)
iv. இலங்கை அரசாங்க நூலகர் சேவை (வகுப்பு III, II, I)
v. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை (தரம் III, II, I)
vi. இணைந்த சாரதிகள் சேவை (III, II, I, விசேட தரம்)
vii. அலுவலக உதவியாளர் சேவை (III, II, I, விசேட தரம்)

2.2 சேவை நிலையம் ஒன்றில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய சேவைக்காலம்

2.2.1. தமது சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 02 வருடங்கள் சேவையாற்றும் அலுவலர்கள் வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

2.2.2. ஒரே சேவை நிலையத்தில் அல்லது இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள சேவை நிலையமொன்றில் அல்லது பல சேவை நிலையங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்டு சேவையாற்றிய அலுவலர்களும் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். (ஒரே மாவட்டத்தினுள் சேவை நிலைய குழுக்கள் ஒன்றினை விடக் கூடுதலாக இருக்க முடியும்.)

2.2.3. விருப்புக்குரிய சேவை நிலையம் ஒன்றில் 05 வருட சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் கட்டாயமாக இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

2.3 சேவை நிலையங்களின் வகைப்பாடு

2.3.1. விருப்பத்திற்குரிய சேவை நிலையங்கள்

இடமாற்றங்களிற்கான கோரிக்கைகளில் அதிகளவு அலுவலர்களினால் கோரப்பட்ட சேவை நிலையங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் (தொகுதி எண். 1)

அத்தியாயம் XVIII இன் பிரிவு 251 இன் துணைப் பிரிவு (iii) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சேவை நிலையங்கள் இணைந்த சேவைகள் அலுவலர்களின் விருப்புக்குரிய சேவை நிலையங்களாகும் என்பதுடன், இடமாற்றங்களிற்கான கோரிக்கைகளில் குறைந்தளவு அலுவலர்களினால் கோரப்பட்ட சேவை நிலையங்கள் விருப்பமற்ற சேவை நிலையங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

பின்வரும் சேவை நிலையங்கள் 2023 ஆம் ஆண்டிற்கான விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களாகும். இந்த சேவை நிலையங்கள் மேலே உள்ள அளவுகோல்களின்படி ஆண்டுதோறும் மாறுபடலாம்.

நிறுவனம்	நிறுவனம் விருப்பத்திற்குரிய சேவை நிலையமாக கருதும் சேவைகள்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
சுங்கத் திணைக்களம்	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
அரசாங்க அச்சுத் திணைக்களம் (முந்தைய வருடாந்த இடமாற்ற சபைகளில் அதிக எண்ணிக்கையிலான அலுவலர்கள் விண்ணப்பித்துள்ளனர்)	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
மதுவரித் திணைக்களம்	இணைந்த சேவைகளிலுள்ள அனைத்து சேவைகளின் அலுவலர்களுக்கும்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு	இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, இலங்கை அரசாங்க நூலகர் சேவை, இணைந்த சாரதிகள் சேவை, அலுவலக உதவியாளர் சேவை ஆகிய சேவைகளின் அலுவலர்களுக்கு
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்	அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, இலங்கை அரசாங்க நூலகர் சேவை, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை, இணைந்த சாரதிகள் சேவை, அலுவலக உதவியாளர் சேவை

	ஆகிய சேவைகளின் அலுவலர்களுக்கு
பரீட்சைத் திணைக்களம்	அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, இலங்கை அரசாங்க நூலகர் சேவை, இணைந்த சாரதிகள் சேவை ஆகிய சேவைகளின் அலுவலர்களுக்கு

2.3.2 விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் பணியாற்றும்/புதிதாக இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு பின்வருவன பொருந்தும்.

i. நிதி அமைச்சின் கீழ் உள்ள விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களான உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களத்திற்கு 2024 வருடாந்த இடமாற்றம் மூலம் இடமாற்றங்கள் வழங்கப்படும்.

ii. முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் அலுவலர்களுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு நேரடியாக இடமாற்றம் வழங்கப்படும். அவ்வாறு இடமாற்றம் வழங்கப்படும்போது குறித்த அலுவலரின் தகவல் தொழிநுட்பம் தொடர்பான தேர்ச்சி மற்றம் பிற தொழிநுட்ப திறமைகள் தொடர்பாக பரிசீலனை செய்யப்படும்.

iii. இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு நேரடியாக அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதில்லை என்பதுடன், நிதி அமைச்சிற்கு மட்டுமே இடமாற்றம் வழங்கப்படும். குறித்த இணைப்புக்கள் நிதி அமைச்சினுடாக மேற்கொள்ளப்படும்.

iv. இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் அத் திணைக்களத்தில் 05 ஆண்டு சேவைக்காலத்தினை பூர்த்தி செய்துள்ள இணைந்த சேவையின் அனைத்து அலுவலர்களும், அத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் (கொழும்பு) பணிபுரிவதாக கருதி இடமாற்றங்கள் வழங்கப்படும்.

v. அ. மேலே உள்ள பிரிவு 2.3.1 இன் பிரகாரம் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் 2024/06/30 ஆந் திகதியில் 5 வருடங்களை நிறைவு செய்த இணைந்த சேவைகளை சேர்ந்த அலுவலர்கள் கட்டாய இடமாற்றத்திற்கு உட்படுவார்கள்.

ஆ. பிரிவு 2.3.1 இல் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினை விருப்பத்திற்குரிய சேவை நிலையமாக குறிப்பிடுவதால், அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு இடமாற்றம்பெறும் முன்னர் விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றில் பணிபுரிந்த அலுவலர்கள், அவ் விருப்பத்திற்குரிய சேவை நிலையத்தில் பணியாற்றி 15 வருடங்கள் கடப்பதற்கு முன் அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வருகை தந்திருந்தால், அத்தகைய அனைத்து அலுவலர்களும் அரசாங்க அச்சுத் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இ. மேலே குறிப்பிட்டுள்ள அ மற்றும் ஆ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, உரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்கள் கட்டாயமாக வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத அலுவலர்கள், எந்த ஒரு சேவை நிலையத்திற்கும் இடமாற்றம் செய்ய விருப்பம் தெரிவித்த அலுவலர்களாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

vi. விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் பணியாற்றும் அலுவலர்களின் வருடாந்த இடமாற்றத்தின் போது, விருப்பத்திற்குரிய சேவை நிலையமாக வகைப்படுத்தப்படாத நிதி அல்லது வேறு வகை சலுகைகள் உள்ள சேவை நிலையங்கள் அல்லது வீட்டிற்கு அருகாமையில் உள்ள சேவை நிலையங்களை கோருதல் வழக்கமாக அமைவது கவனிக்கப்படுவதால், விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் பணியாற்றும் அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் இது போன்ற கோரிக்கைகள், தமது சேவைக் காலத்தில் எந்தவொரு விருப்பத்திற்குரிய சேவை நிலையத்திலும் பணியாற்றாத அலுவலர்கள் அனைவரினதும் கோரிக்கைகளையும் பரிசீலித்த பின்னரே கவனத்தில் கொள்ளப்படும்.

vii. விருப்பத்திற்குரிய சேவை நிலையமொன்றில் பணிபுரியும் அலுவலர் ஒருவரின் வாழ்க்கைத்துணை பொலிஸில் அல்லது முப்படை இராணுவத்தில் வடக்கு கிழக்கில் கடமையாற்றும்பொழுது ஊனமுற்ற நிலைமைக்கு உட்பட்டமையினை எழுத்து மூல ஆதாரமாக சமர்ப்பிக்கப்படின், அந்த அலுவலரின் கட்டாய சேவைக்காலம் முடிவடைந்து விருப்பத்திற்குரிய சேவை நிலையத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படும் போது குறித்த விருப்பத்திற்குரிய சேவை நிலையத்திற்கு அருகிலுள்ள அலுவலகத்திற்கு அல்லது அலுவலரின் கோரிக்கையின் பிரகாரம் விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அல்லாத அலுவலகம் ஒன்றிற்கு (விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் அமைந்துள்ள) இடமாற்றம் வழங்க முடியும். (வருடாந்த இடமாற்ற குழுவிற்கு கிடைக்கப்பெறாத கோரிக்கைகள் தொடர்பாக பின்னர் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

viii. ஊனமுற்றோர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் பணிபுரியும் அலுவலர்கள், விருப்பத்திற்குரிய சேவை நிலையத்தில் பணியாற்றக்கூடிய அதிகபட்ச கால எல்லையாகிய 05 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றுவதற்கு அல்லது தனக்கு வசதியான சேவை நிலையம் ஒன்றை பெற்றுக்கொள்ள இந்த ஏற்பாடுகள் பொருந்தாது என்பதுடன், குறித்த அலுவலர் பணிபுரியும் விருப்பத்திற்குரிய சேவை நிலையத்திற்கு அருகில், விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அல்லாத அலுவலகம் ஒன்றினை வழங்குவதற்கு இடமாற்றக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.

ix. விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களில் தொடர்ந்து இருப்பதற்கு, தொழிற்சங்கம் தொடர்பில் வழங்கப்படும் அனுசரணை பொருத்தமற்றது.

2.4 நடைமுறை மற்றும் ஏனைய விடயங்கள்

i. வருடாந்த இடமாற்ற கொள்கையில் 2:2:1 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் ஒன்றுக்குத் தகுதியுள்ள அலுவலர் ஒருவர் வேறொரு சேவை நிலையத்திற்கு இடமாற்றம் ஒன்றினை கோரும்போது, அக் கோரிக்கையினை நிறைவேற்றுவதற்காக அதே கொள்கையில் 2:2:2 ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள சேவை நிலையம் அல்லது பல சேவை நிலைய குழுவில் அதிகூடிய சேவைக் காலம் பணியாற்றியுள்ள அலுவலர்களை வெளியிடங்களுக்கு இடமாற்றலாம்.

ii. குறித்த ஒரு சேவை நிலையத்திற்கான இடமாற்றத்திற்காக அதிகளவிலான கோரிக்கைகள் உள்ள போது அவற்றுள் அதிகூடிய சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள அல்லது மேற்குறிப்பிட்ட 2.2.2 இன் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் (ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு) அச் சேவை நிலையத்திற்கு இடமாற்றப்படல் வேண்டும்.

iii. விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அல்லாத அலுவலகம் ஒன்றில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் அலுவலர் ஒருவர் குறித்த சேவை நிலையம் ஒன்றிற்கு இடமாறல் ஒன்றிற்கான கோரிக்கை ஒன்றை மேற்கொள்ளும் போது அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கு அந்த சேவை நிலையத்தில், மேற்குறிப்பிட்ட 2.2.2 இன் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள அதிகூடிய சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள அலுவலரை அங்கிருந்து வெளியே இடமாற்ற முடியும்.

iv. விருப்புக்குரிய சேவை நிலையங்களுக்கு இடமாற்றங்களை வழங்கும் போது, விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அல்லாத சேவை நிலையங்களில் சேவையாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படும். மேலும், இவ்வாறான இடமாற்றங்களின் போது சேவைக்காலம் மற்றும் அலுவலர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் என்பன கவனத்திற்கு கொள்ளப்படும்.

v. விருப்புக்குரிய சேவை நிலையங்களுக்காக கோரப்படும் இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது, கட்டாயமாக இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டிய அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படுமாயினும் இடமாற்றங்களைக் கோரும் அலுவலர்களின் கோரிக்கைகளில் இடமாற்றங்களுக்கு கட்டாயமாக கட்டுப்பட வேண்டிய அலுவலர்களின் கோரிக்கைகளுக்கு மிக முன்னுரிமை வழங்கப்படும்.

vi. இடமாற்றக் குழுக்களினால் அலுவலர்கள் இடமாற்றப்படும் போது திணைக்களங்களில் சேவையின் அவசியத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதுடன் அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் சிரேஸ்ட மற்றும் கனிஸ்ட அலுவலர்களுக்கிடையில் சமநிலையினைப் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (உதாரணம். பரீட்சைகள் திணைக்களத்தில் கூடுதலான ஆண் அலுவலர்களை வைத்திருத்தல் வேண்டும்).

viii. இடமாற்றக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட வில்லையாயின், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயக்தினால் வருடாந்த இடமாற்றக் கட்டளைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத அலுவலர்களிடம் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் வினவப்படும்.

ix. வருடாந்த இடமாற்ற குழுவிற்கு தவறான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதனால் இடமாற்றங்கள் வழங்குவதில் சிக்கல்கள் ஏதும் இருக்குமாயின் மீளாய்வுக் குழுவின் மூலமாக அவ்விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு புதிய இடமாற்றம் வழங்குவதற்கான வாய்ப்புள்ளது என்பதோடு அத்தகைய அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் மறுபரிசீலனை செய்யப்படமாட்டாது.

2.4.1 சேவைக் காலத்தைக் கணிப்பிடுதல்

i. வருடாந்த இடமாற்றங்களுடன் தொடர்புபட்ட இடமாற்றக் காலமானது முன்னைய ஆண்டின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் கணிப்பிடப்படும். (உ+ம் - 2023 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்களுக்காக 2023.12.31 ஆம் திகதி) விருப்புக்குரிய சேவை நிலையங்களுக்காக 2023.06.30 வரையான சேவைக்காலம் கணிப்பிடப்படும்.

ii. சேவைக் காலத்தைக் கணிப்பிடும் போது, அலுவலர் கடமைக்கு அறிக்கையிட்ட ஆண்டின் ஜனவரி மாதத்தின் முதலாவது நாளானது அவரின் சேவையின் முதலாவது நாளாக கருதப்படல் வேண்டும். எனினும் அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு காரணத்தினால் சேவைக்குச் சமூகமளித்த திகதி பின்னைய ஒரு திகதியாயின் இடமாற்றக் குழு அது தொடர்பில் கவனத்தில் எடுக்கும். (மேலும், அலுவலர் ஒருவர் தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் சேவையில் இல்லாத காலப்பகுதியானது சேவைக் காலத்தின் கருதுகைக்குள் எடுக்கப்படக்கூடாது)

iii. ஒரு திணைக்களம் / அமைச்சின் கீழ் ஏதேனும் மாவட்டத்தில் வரும் சேவைக்காலமானது அத் திணைக்களம் / அமைச்சின் சேவைக்காலமாக கருதப்படும். ஒரு மாவட்டத்திற்குள் சேவைக்

காலத்தினைக் கணிப்பிடும் போது மாவட்டத்தில் ஏதேனும் ஓர் அலுவலகத்திலுள்ள சேவையானது மாவட்டத்தில் வரும் சேவைக்காலமாக கருத்திற்கொள்ளப்படும்.

iv. இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள சேவை நிலையம் அல்லது பல சேவை நிலையங்களில் கடமையாற்றியுள்ள அலுவலரொருவர் எந்தவொரு சேவை நிலையத்தில் கடமையாற்றினாலும் 05 வருட சேவைக் காலத்தினைத் தாண்டி இருப்பின் அவர் இடமாற்றங்களுக்கு கட்டுப்படுவார். என்றாலும் விருப்புக்குரிய சேவை நிலையமொன்றில் கடமையாற்றும் அலுவலர் ஒருவருக்கு அச்சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

v. அமைச்சுக்களின்/ திணைக்களங்களின் ஸ்தாபிப்பு அல்லது கலைப்பு காரணமாக ஒரு அமைச்சு / திணைக்களத்திலிருந்து இன்னொரு அமைச்சு / திணைக்களத்துக்கு இணைப்பு செய்யப்பட்ட அலுவலர்களின் சேவைக் காலத்தினைக் கணிப்பிடும் போது கலைக்கப்பட்டுள்ள அவ் அமைச்சு / திணைக்களத்தில் வரும் சேவைக் காலமும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் அல்லது தண்டனை இடமாற்றமாக இடமாற்றப்படுகின்ற அலுவலர்கள் தவிர்ந்த திணைக்களத்தலைவர்களின் தேவைப்படி இடமாற்றம் பெற்ற அலுவலர்களின் சேவைக்காலத்தை கணிப்பிடும்போது அவர் இறுதியாக சேவையாற்றிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த சேவைக் காலத்தினைக் கணிப்பிடுவதற்கு எடுக்கப்படும்.

vi. இரு மாவட்டங்களுக்கிடையில் இணைப்பு 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு அருகிலுள்ள நகராட்சி அலுவலகங்களுக்கிடையில் மாவட்ட அடிப்படையில் பிரத்தியேகமாக இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு கவனத்திற் கொள்ளப்படும். (உ+ம் – பாணந்துறை மற்றும் மொரட்டுவ நகராட்சி அலுவலகங்களுக்கிடையில்)

vii. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் போது அவர்களின் நியமன திகதியாக கருதப்படுவது, அவர்களது ஒரு வருடகால பயிற்சி ஆரம்பிக்கும் திகதியல்ல என்பதோடு குறித்த பயிற்சி முடிவடைந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவிக்கு நியமனம் வழங்கப்படும் திகதியேயாகும்.

2.4.2 விருப்புக்குரிய சேவை நிலையங்களிற்கான சேவைக் காலத்தினைக் கணிப்பிடுதல்

i. விருப்புக்குரிய சேவை நிலையம் ஒன்றில் 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர் ஒருவர் அவ்விருப்புக்குரிய சேவை நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்று 15 வருடங்கள் கடந்திருந்தால் மட்டுமே மீண்டும் விருப்புக்குரிய சேவை நிலையம் ஒன்றுக்கு இடமாற்றம் ஒன்றைக் கோர முடியும். .

ii. ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகளில் பணிபுரிந்த அலுவலர்களின் விருப்புக்குரிய சேவை நிலைய சேவைக்காலத்தைக் கணிக்கின்ற போது, முன்னைய சேவை ஒன்றில் அச் சேவை தொடர்பில் விருப்புக்குரிய திணைக்களம் ஒன்றில் பணியாற்றியிருப்பின் அதுவும் கணக்கில் எடுக்கப்படும். (உ+ம் – கனிஷ்ட நிலை ஊழியர் பதவியுயர்வு பெற்ற அலுவலர்களின் கனிஷ்ட நிலைச் சேவைக் காலம்)

iii. விருப்புக்குரிய சேவை நிலையம் ஒன்றாக கருதப்படும் சேவை நிலையம் ஒன்றில் தற்போது பணிபுரியும் பெண் உத்தியோகத்தர் ஒருவரின் சேவைக்காலத்தைக் கணிக்கும் போது அவர் அச்சேவை நிலையத்தில் சேவையாற்றிய காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பிரசவ விடுமுறையின் அளவிற்கேற்ப சேவைக்காலம் நீடிக்கப்பட வேண்டும். ஆனால், சம்பளமற்ற மகப்பேற்று விடுமுறை எடுக்கப்பட்டிருந்தால், அக்காலப்பகுதிக்காக விருப்புக்குரிய சேவை நிலையத்தில் பணிபுரியும் காலத்தை நீடிக்கக் கூடாது.

உ+ம்: 2017/01/01ஆம் திகதி மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சேவைக்காக இணைக்கப்பட்ட பெண் உத்தியோகத்தரொருவர், 2018ஆம் ஆண்டு 06 மாதங்கள் பிரசவ விடுமுறையினை பெற்றுக்கொள்ளுமிடத்து குறித்த உத்தியோகத்தரின் சேவைக்காலம் 2022.01.01ஆம் திகதியிலிருந்து 06 மாதங்கள் நீடிக்கப்பட வேண்டும். அந்த அலுவலர் சம்பளமற்ற மகப்பேற்று விடுமுறை எடுத்திருந்தால், அந்த காலப்பகுதி சேவை நீடிப்புக்கு பொருந்தாது.

iv. விருப்புக்குரிய சேவை நிலையங்களில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்கள், அச் சேவைக் காலத்தினுள் பெற்றுக்கொள்ளும் பிரசவ விடுமுறைகள் தொடர்பில் வருடாந்த இடமாற்றக் சபையினால் விண்ணப்பங்கள் கோரும் போது கட்டாயமாக குறிப்பிடப்படுதல் வேண்டும். அது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.4.3 வருடாந்த இடமாற்றக் குழுக்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாத சந்தர்ப்பங்கள்

பின்வரும் நிறுவனங்களுக்கு வருடாந்த இடமாற்றக் குழுக்களின் ஊடாக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது.

i. ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகம்
ii. பிரதமர் அலுவலகம்
iii. அரசாங்க கட்சி தலைமை அமைப்பாளர் அலுவலகம்

iv. சபாநாயகர் செயலகம்

v. அமைச்சரவை அலுவலகம்

vi. எதிர்க்கட்சித் தலைவர் செயலகம்

vii. இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்டுள்ள அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்குகின்ற போது சில அலுவலர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக அதன் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்படுகின்ற விதந்துரைப்புக்களைக் கவனத்திற் கொள்வதற்கு வருடாந்த இடமாற்றக் குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

viii. பின்வரும் திணைக்களங்கள் மற்றும் தாபனங்களுக்கு வருடாந்த இடமாற்றக் குழுக்களின் ஊடாக இடமாற்றம் வழங்க முடியுமாயினும் அத் திணைக்களங்களுக்கு/ தாபனங்களுக்கு அனுப்பப்படுகின்ற அலுவலர்கள் தொடர்பில் குறித்த திணைக்களங்களின் /தாபனங்களின் தலைவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றதன் பின்னரே இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

a. அரசாங்க சேவை ஆணைக்குழு
b. பொலிஸ் ஆணைக்குழு
c. தேர்தல்கள் ஆணைக்குழு

3. வருடாந்த இடமாற்றக் குழுவின் அமைப்பு பற்றிய விவரங்கள்

இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 250 ஆம் திருத்தத்தின் பிரகாரம் இணைந்த சேவைகள் பிரிவின் வருடாந்த இடமாற்றக் குழுவின் அமைப்பு விபரங்கள் பின்வருமாறு அமையும்.

I. இணைந்த சேவைகள் பிரிவின் சேவை தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான ஓர் பிரதி/உதவிப் பணிப்பாளர்

II. இணைந்த சேவைகள் பிரிவின் ஏதேனும் சேவைக்குப் பொறுப்பான பிறிதொரு பிரதி/உதவிப் பணிப்பாளர்

III. வருடாந்த இடமாற்ற குழுவின் விடய பரப்பிற்குட்பட்ட அலுவலர் குழுக்களுக்கு மற்றும் சேவைக்குட்பட்ட அரச அலுவலர்களின் குறைந்த பட்சம் 15% ஆன பிரதிநிதித்துவத்துடன் சகல தொழிற்சங்கங்களின் மூலமும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதி அல்லது முழுநேர தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள ஒரு அலுவலர்.

4. வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவின் அமைப்பு பற்றிய விவரங்கள்

வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கு ஒவ்வொரு சேவைக்கும் வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான தனித்தனியான குழுக்களை அமைப்பதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார். ஒவ்வொரு வருடாந்த இடமாற்றக் குழுவினதும் அமைப்பு பின்வருமாறு.

i. இணைந்த சேவைகள் பிரிவின் சேவை தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான ஒரு பணிப்பாளர்
ii. இணைந்த சேவைகள் பிரிவின் சேவை தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான ஒரு பிரதி/உதவிப் பணிப்பாளர்
iii. இணைந்த சேவைகள் பிரிவின் பிறிதொரு பிரதி/உதவிப் பணிப்பாளர்
iv. ஒவ்வொரு சேவைக்குட்பட்ட அரச அலுவலர்களின் குறைந்த பட்சம் 15% ஆன பிரதிநிதித்துவத்துடன் சகல தொழிற்சங்கங்களின் மூலமும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு பிரதிநிதி அல்லது முழுநேர தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள ஒரு அலுவலர்

5. வருடாந்த இடமாற்றம் வழங்கும்போது கவணத்தில் கொள்ளப்படும் வேறு பொது காரணங்கள்

5:1 விசேட காரணங்கள்

i. எவரேனும் ஒரு அலுவலரின் வாழ்க்கைத் துணை பொலிஸ் அல்லது முப்படையில் வடக்கு கிழக்கில் கடமையின் போது அங்கவீனர் ஆனார் என்பதை உறுதி செய்ய எழுத்து மூலமான சான்றுகளைச் சமர்ப்பிப்பாராயின், அத்தகைய அலுவலரின் இடமாற்றமானது அவ் அலுவலரின் கோரிக்கைக்கு அமைய மாத்திரமே வழங்கப்பட வேண்டும். அத்துடன் அத்தகைய அலுவலர்களின் இடமாற்றக் கோரிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். மேலும், அத்தகைய அலுவலர்களின் சேவைக்காலத்தின் அடிப்படையிலேயே, அவர்களுக்கு விருப்புக்குரிய சேவை நிலையத்தை வழங்க முடியும். (வருடாந்த இடமாற்றக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாத கோரிக்கைகள் தொடர்பாக பின்னர் பரிசீலிக்கப்படமாட்டாது.) இத்தகைய அலுவலர்களுக்கு விருப்புக்குரிய சேவை நிலையம் ஒன்றுக்கு வெளியில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டி ஏற்படுமாயின் வருடாந்த இடமாற்ற கொள்கையின் 2.3.2.v இன் பிரகாரம் வழங்கப்படும்.

